தினமலர் நமது மலர்
வாசகர்களே சொல்லுங்க: உங்கள் பகுதி பிரச்னைகளை 98423 70262 என்ற வாட்ஸ்அப்பில் என்னில் தெரியிபுங்கள். அவற்றுக்கு தீர்வுகாண, தினமலர் துணைநிற்கும்.
24.11.2026
தர்மபுரி ◦ கிருஷ்ணகிரி

ஆவேசம்

* கிராணைட் குவாரி அனுமதியை ரத்து செய்யணும்
* பென்னாகரம் அருகே கிராம மக்கள் போராட்டம்

■ பென்னாகரம், நவ. 24-

பென்னாகரம் அடுத்த மஞ்சநாயக்கனஅள்ளி பஞ்.க்கு உட்பட்ட பகுதியில் கிராணைட் குவாரி செயல்பட்டு வருகிறது. குவாரி அமைந்துள்ள பகுதியில் இருந்து 100 மீட்டர் சுற்றளவுக்குள் உயர்நிலைப் பள்ளி, நடுநிலைப் பள்ளி மற்றும் கருமாரியம்மன், பெருமாள், ஐயப்பன், முருகன் கோயில்கள், தேவாலயம் உள்ளிட்ட வழிபாட்டுத் தலங்கள் அமைந்துள்ளது. இந்நிலையில், குவாரியில் பாறைகளை வெடி வைத்து தகர்ப்பது, கற்களை வெட்டி எடுப்பது, கனரக வாகனங்களை இயக்குவது போன்ற பணிகளால் பள்ளி மாணவர்களின் பாதுகாப்பு கேள்விக்குறியாகும் சூழல் ஏற்பட்டுள்ளதாக அப்பகுதி மக்கள் அச்சம் தெரிவிக்கின்றனர். மேலும், வெடிவைப்பின்போது ஏற்படும் அதிர்வுகள் மற்றும் ஒலி மாசு காரணமாக அருகில் வசிக்கும் மக்களின் இயல்பு வாழ்க்கையும் பாதிக்கப்படுவதாக கூறுகின்றனர்.

ஏற்கனவே இப்பகுதியில் நிலவும் வறட்சியால் நிலத்தடி நீர்மட்டம் குறைந்து, விவசாயம் பாதிக்கப்பட்டு வரும் நிலையில், கிராணைட் குவாரியின் செயல்பாட்டால் நிலத்தடி நீர்மட்டம் மேலும் குறைந்து, குடிநீர் ஆதாரங்களுக்கும் விவசாயத்திற்கும் பாதிப்பு ஏற்படும் அபாயம் உள்ளதாகக் கவலை தெரிவிக்கின்றனர்.

அதேபோல் பாறைகளை உடைக்கும்போது வெளியாகும் தூசுகளால் காற்று மாசுபடுவதுடன், பொதுமக்களுக்கு சுவாசக் கோளாறுகள் உள்ளிட்ட பல்வேறு உடல்நலப் பாதிப்புகள் ஏற்பட வாய்ப்புள்ளதாக அச்சம் தெரிவிக்கின்றனர். குவாரி அமைப்பதற்கான அனுமதி வழங்கப்பட்ட விவரம், பணிகள் தொடங்கிய தங்களுக்குத் தெரியவந்த தாகக் கூறும் பொதுமக்கள், இதுதொடர்பாக கலெக்டர், தாசில்தார் மற்றும் எம்எல்ஏவிடம் பல முறை மனுக்கள் அளித்தும் இது வரை உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இதனால் ஆத்திரமடைந்த 15க்கும் அதிகமான கிராமங்களைச் சேர்ந்த பொது மக்கள் பள்ளிகள் மற்றும் வழிபாட்டுத் தலங்கள் அருகே அமைந்துள்ள கிராணைட் குவாரிக்கு வழங்கப்பட்ட அனுமதியை உடனடியாக ரத்து செய்ய வேண்டும் என்றும், குவாரியின் செயல்பாட்டை முழுமையாக நிறுத்த வேண்டும் என வலியுறுத்தி நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். மேலும், சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகள் நேரில் வந்து குவாரி அமைந்துள்ள இடத்தை ஆய்வு செய்வதுடன், அனுமதி வழங்கப்பட்டதற்கான ஆவணங்கள் மற்றும் அரசு விதிமுறைகள் முறையாகப் பின்பற்றப்பட்டுள்ளதா என்பதை ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோரிக்கை விடுத்தனர்.



பென்னாகரம் அருகே மஞ்சநாயக்கனஅள்ளி கிராமத்தில் உள்ள கிராணைட் குவாரியை அகற்றக் கோரி பொதுமக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மாவட்டத்தில் வெறிநாய்க்கடி நோய் கட்டுப்படுத்த வழிகாட்டுதல் குழு அமைப்பு : கலெக்டர் தகவல்

■ கிருஷ்ணகிரி, நவ. 24

கிருஷ்ணகிரி கலெக்டர் அலுவலக கூட்ட அரங்கில், வெறிநாய்க்கடி (ரேபிஸ்) கட்டுப்பாட்டிற்கான மாவட்ட வழிகாட்டுதல் குழு கூட்டம் மற்றும் குளிர்கால தொற்று நோய் தடுப்பு பணிகள் குறித்து ஆய்வுக் கூட்டம் நடந்தது. கலெக்டர் தினேஷ்குமார் தலைமை வகித்து கூறியதாவது, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் வெறிநாய்க்கடி (ரேபிஸ்) நோயைக் கட்டுப்படுத்தவும், தெருநாய்க்கடி சம்பவங்களைக் குறைக்கவும் மாவட்ட வெறிநாய்க்கடி வழிகாட்டுதல் குழு அமைக்கப்பட்டுள்ளது. ஒருங்கிணைந்த நோய்க் கண்காணிப்புத்திட்டத்தின் கீழ் நோய்க் கண்காணிப்பு, உடனடி தகவல் தெரிவிப்பு, திறமையான தடுப்பு நடவடிக்கை, பொதுச் சுகாதார அவசர நிலைகளைக் கையாளுதல் மற்றும் தொடர் தடுப்பூசி டோஸ்கள் போடப்படுவதைக் கண்காணித்தல் ஆகிய பணிகளை இக்குழு மேற்கொள்ளும்.

இக்குழுவில் மாவட்ட சுகாதார அலுவலர், நகர சுகாதார அலுவலர், இணை இயக்குனர் (சுகாதாரப் பணிகள்), அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை முதல்வர், மருத்துவக் கண்காணிப்பாளர், மாநகராட்சி ஆணையர், கால்நடை பராமரிப்புத் துறை இணை இயக்குநர், மாவட்ட தொற்றுநோயியல் வல்லுநர், பூச்சியியல் வல்லுநர், நோய்க்கடத்தி கட்டுப்பாட்டு அலுவலர், உதவி இயக்குனர் (ஊராட்சிகள்), மாவட்ட கால்நடை அலுவலர், உதவி இயக்குனர் (பேரூராட்சிகள்), கல்வி மற்றும் தொடர்பு அலுவலர், சுகாதாரக் கல்வியாளர், நகராட்சி ஆணையர் இக்குழுவில் உறுப்பினர்களாக உள்ளனர்.

மேலும், மாவட்ட விரைவு மீட்புக் குழுவினர் புகாரளிக்கப்பட்ட அனைத்துப் பகுதிகள் மற்றும் பொதுச் சுகாதார நிகழ்வுகளை விசாரித்து உடனடி கட்டுப்பாடு மற்றும் தடுப்பு நடவடிக்கைகளை பரிந்துரை மேற்கொள்வார்கள். ஒரே சுகாதாரம் அணுகுமுறையின் கீழ் சுகாதார நிறுவனங்கள், உள்ளாட்சி அமைப்புகள், உணவுப் பாதுகாப்பு, கால்நடை, குடிநீர் வழங்கல் உள்ளிட்ட துறைகளுடன் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும்.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி, ஊராட்சி மற்றும் சுகாதாரத்துறையில் பணிபுரியும் அனைத்து சுகாதாரப் பணியாளர்கள், நாய் பிடிக்கும் பணியாளர்கள் மற்றும் நாய்க்கடியால் பாதிப்புக்கு போடுக்கு சிகிச்சை அளிப்பவர்களுக்கு வெறிநாய்க்கடி தடுப்பூசி போடப்படும். தற்போது குளிர் காலம் தொடங்கியுள்ள நிலையில், பொது மக்கள் குடிதிரை நன்கு காய்ச்சி குடிக்க வேண்டும். மேலும், சளி, காய்ச்சல் ஏற்படும் போது உடனடியாக அருகில் உள்ள அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற வேண்டும் என்றார். இதில், இணை இயக்குநர் (நலப்பணிகள்) டாக்டர். மோகனபாபு, மாவட்ட சுகதாரா அலுவலர் டாக்டர்.ஜெகநாதன் மற்றும் டாக்டர்கள், மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி மற்றும் வனத்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



ஓசூர் அருகே தேவகானப்பள்ளியில் குண்டும், குழியுமான சாலையை சீரமைக்க வலியுறுத்தி கலெக்டரிடம் மனு அளிக்க வந்த கிராம மக்கள்.

குண்டும், குழியுமான சாலையை சீரமைக்க கோரி கலெக்டரிடம் மனு

■ கிருஷ்ணகிரி, நவ. 24-

ஓசூர் அருகே தேவகானப்பள்ளி ரோடு முதல் பைரகொண்டப்பள்ளி சாலை இணைப்பில், திண்ணூர் முதல் நாகத்தரம் வரை 2 கி.மீ. தூரமுள்ள சாலை கடந்த 20 ஆண்டுகளுக்கும் மேலாக பழுதாகி குண்டும் குழியுமாக உள்ளது. இதனால் அப்பகுதிகளில் வசிக்கும் 100க்கும் அதிகமான குடும்பத்தினர், பள்ளி மாணவ, மாணவிகள் மற்றும் வாகன ஓட்டிகள் கடும் சிரமத்துக்குள்ளாகி வருகின்றனர். சாலையை சீரமைக்க வலியுறுத்தி, வட்டார வளர்ச்சி அலுவலர், தாசில்தார் உள்ளிட்ட அதிகாரிகளிடம் பலமுறை மனு அளித்தும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இந்நிலையில் ஊர் கவுண்டர்களான காந்தராஜ், பாக்கியநாதன், கணேச ரெட்டி, பாஸ்கரன் உள்ளிட்டோர், கிருஷ்ணகிரி கலெக்டர் தினேஷ்குமாரை நேரில் சந்தித்து நிவைவூட்டும் மனு அளித்தனர். அப்போது மழைக்காலங்களில் இச்சாலையில் வாகனங்களில் செல்ல முடியாத நிலை ஏற்படுவதாகவும், 20 ஆண்டுகளுக்கும் மேலாக நீடிக்கும் இப்பிரச்னைக்கு இனியாவது தீர்வு கண்டு, சாலையை உடனடியாக சீரமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினர்.

கழிவு வாகனம் ஏலம்

■ தர்மபுரி, நவ. 24

தர்மபுரி மாவட்ட சமூகநல அலுவலகத்துக்கு ஒதுக்கப்பட்ட ஜீப் கழிவு செய்யப்பட்டுள்ளது.

தர்மபுரி மாவட்ட சமூகநல அலுவலக பயன்பாட்டில் இருந்த வாகனத்தை 36 ஆயிரம் ரூபாய்க்கு ஏலம் விட ஆரம்ப தொகையாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

மேற்படி கழிவு செய்யப்பட்ட வாகனம் வரும் டிச. 2 அன்று முற்பகல் 11 மணியில வில் கலெக்டர் அலுவலகத்தில் ஏலம் விடப்பட வுள்ளது. மேற்படி ஏலத்தில் கலந்து கொள்ள விருப்பமுள்ளவர்கள் ஏலத்தில் கலந்து கொண்டு விலைப்புள்ளியை கோரலாம் என கலெக்டர் சரவணன் தெரிவித்துள்ளார்.

பருவமழை குறைவால் சரிந்த நீர்மட்டம் குட்டையாக மாறிய தொப்பையாறு அணை

■ தர்மபுரி, நவ. 24-

தர்மபுரி மாவட்டத்தில் பருவமழையை நம்பியே விவசாயப் பணிகள் மேற்கொள்ளப்படுவதால் மானாவாரி சாகுபடி பிரதானமாக உள்ளது. மாவட்டத்தின் ஆண்டு சராசரி மழையளவு 942 மி.மீ. ஆகும்.

ஆனால், கடந்த செப்டம்பர் மாதம் வரை சராசரியாக 200 மி.மீட்டரும், அக்டோபர் மாதம் 143 மி.மீட்டர் மழை மட்டுமே பதிவாகியுள்ளது. இதனால், மாவட்டத்தில் உள்ள அணைகளின் நீர்மட்டம் 10 சதவீதத்துக்கும் கீழ் குறைந்து விட்டது. தர்மபுரி மாவட்டத்தில் அமைந்துள்ள முக்கிய அணைகளில் ஒன்றான தொப்பையாறு அணை 50.18 அடி உயரம் கொண்டது. இதன் முழு கொள்ளவு 298.60 மில்லியன் கன அடியாகும். இதில் கடந்தாண்டு நவம்பரில் 39 அடி உயரத்துக்கு 160.94 மில்லியன் கன அடி நீர் இருந்தது. ஆனால் நடப்பாண்டு, நவம்பர் 19ம் தேதி நிலவரப்படி அணை யில் 9.94 அடி உயரத்துக்கு, 9.06 மில்லியன் கன அடி நீர் மட்டுமே உள்ளது.

இதனால் பிரம்மாண்டமாக காணப்படும் தொப்பையாறு அணையில் தண்ணீரின் அளவு குறைந்ததால் குட்டை போல காட்சியளிக்கிறது. இதேபோல 50 அடி உயரம் கொண்ட சின்னாறு அணையின் நீர்மட்டம் 28.37 அடியாகவும், 25 அடி உயரம் கொண்ட கேசர்குளி அணையின் நீர்மட்டம் 19.02 அடியாகவும், 65.27 அடி உயரம் கொண்ட வாணியாறு அணையில் 27.88 அடியாகவும், 24.60 அடி உயரம் கொண்ட நாகாவதி அணையின் நீர்மட்டம் 8.13 அடியாகவும் குறைந்து காணப்படுகிறது. இதனால் தர்மபுரி மாவட்டத்தில் நடப்பாண்டு விவசாயம் கேள்விக்குறியாகியுள்ளது.



தர்மபுரி மாவட்டம் தொப்பையாறு அணையில் நீர்மட்டம் குறைந்து குட்டை போல் காட்சியளிக்கிறது.

வாகனம் ஓட்டும் போது செல்போன் பேசாதீர்கள்

பேங்க் ஆஃப் பரோடா
Bank of Baroda
குந்தாரப்பள்ளி கிளை
ராமாபுரம் அஞ்சல், கிருஷ்ணகிரி நகர், கிருஷ்ணகிரி - 635 115.
போன் : 04343-242427, Email: kundar@bankofbaroda.com, Web : bankofbaroda.bank.in
(baanknet போர்டல்கில் நடத்தப்படும் ஏலத்திற்கான செய்திக்குறிப்புகளில் வெளியிடப்படும் கருக்கமான விற்பனை அறிவிப்பு)
அசையா சொத்துக்களின் விற்பனைக்கான மின் ஏல விற்பனை அறிவிப்பு
பிற்சேர்க்கை IV-Aவின்படி (விதி 6(2) மற்றும் 8(6)யை பார்க்கவும்)
2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்கள் அமலாக்கச்சட்டம் விதிகளின் கீழ் 6(2) மற்றும் 8(6) இன் கீழ் வைக்கப்பட்டுள்ள அசையாச் சொத்துக்களை மின் ஏலம் மூலம் விற்பனை செய்தல் அறிவிப்பு.
கடன்தாரர் / ஜாமீன்தாரர் / அடமானதாரர் ஆகியோருக்கு குறிப்பாகவும் பொதுமக்களுக்கு பொதுவாகவும் இந்த அறிவிப்பின் மூலம் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், கீழே குறிப்பிட்டுள்ள சொத்துக்களை பாங்க் ஆஃப் பரோடா வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்களால் சுவாதீனம் செய்யப்பட்ட கீழே உள்ள சொத்துக்கள் "எங்கு உள்ளதோ அப்படியே" "எப்படி உள்ளதோ அப்படியே" மற்றும் " என்ன இருக்கிறதோ அதே நிலையில்" என்ற அடிப்படையில் வங்கியில் பெறப்பட்ட கடனுக்காக கீழே குறிப்பிட்டுள்ள கடன் மற்றும் செலவுகளை திரும்பப் பெறும் நோக்கத்துடன் மின் ஏலம் மூலம் விற்பனை செய்யப்பட உள்ளது. கடன்தாரர் / ஜாமீன்தாரர் / அடமானதாரர் விபரம், நிலுவைத் தொகை விபரம், சொத்து விபரம் குறைந்தபட்ச கேட்பு விலை, மின்னணு ஏலத் தேதி மற்றும் நேரம், பேவணித் தொகை மற்றும் ஏல அதிகாரிப் தொகை ஆகியவை கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.
திரு. T M வேல்குமார் த/பெ. T. முனிரராஜ், கதவு எண். 3/94, சமந்தமலை கிராமம், குந்தாரப்பள்ளி, கிருஷ்ணகிரி-635 115. ஜாமீன்தாரர் : திரு. T M ராஜ் த/பெ. T. முனிரராஜ், கதவு எண். 3/94, சமந்தமலை கிராமம், குந்தாரப்பள்ளி, கிருஷ்ணகிரி-635115.
1. Term Loan A/c.No.18170600010131, நிலுவை தொகை ரூ.11,92,965,31/- மேலும் 22.11.2026 அன்று முதல் வட்டி மற்றும் இதர கட்டணங்கள்.
2. Term Loan A/c.No.18170600010515, நிலுவை தொகை ரூ.3,29,592,30/- மேலும் 22.11.2026 அன்று முதல் வட்டி மற்றும் இதர கட்டணங்கள்.
21.11.2026 அன்று மொத்த நிலுவைத் தொகை ரூ.15,22,557.61/-
அசையாச் சொத்தின் சுருக்கமான விவரங்கள் மற்றும் ஏதேனும் வில்லங்கங்கள் இருப்பின்
கிருஷ்ணகிரி பதிவு மாவட்டம், கிருஷ்ணகிரி இணை I சார் பதிவு மாவட்டம், கிருஷ்ணகிரி தாலுகா, குந்தாரப்பள்ளி, சமந்தமலை கிராமம், குந்தாரப்பள்ளி வருவாய் கிராம பழைய நத்தம் சர்வே நெ.326/2, நத்தம் புதிய நுணை பிரிவு சர்வே நெ. 414/23, அமைந்துள்ள நிலம் மற்றும் கட்டிடம் உட்பட. நான்கு எல்லைகள்: வடக்கு திரு. T.முனிரராஜ் வீடு, தெற்கு திரு. முனுசாமி வீடு, மேற்கு திரு. ராஜகோபல் வீடு மற்றும் பொது சாலை, மேற்கு: சாமுண்டி அம்மன் கோயில் நிலம். அளவுகள்: கிழக்கு மேற்காக 33 ¼ அடி, தெற்கு வடக்காக 33 ¼ அடி இதன் மொத்தப் பரப்பளவு 1139.06 சதுரஅடி. இந்த சொத்தானது திரு. T M வேல்குமார் பெயரில் உள்ளது. சமந்தமலையின் கிராம பஞ்சாயத்து மற்றும் வேப்பனப்பள்ளி ஒன்றிய கவுன்சில் எல்லைக்கு உட்பட்டது.
சுவாதீன நிலை : ஆக்கபூர்வ நிலை
நிர்ணயிக்கப்பட்ட விலை ரூ. 29,00,000/- டேவணித் தொகை ரூ. 2,90,000/- ஏல உயர்வு தொகை ரூ.25,000/-
மின் ஏல தேதி மற்றும் நேரம் 23.12.2026 அன்று மதியம் 2.00 மணி முதல் 6.00 மணி வரை வரம்பற்ற 10 நிமிட அவகாசத்துடன் மின் ஏலம் நடைபெறும்
சொத்தினை பார்வையிடும் தேதி : 10.12.2026 (நேரம் காலை 10.30 மணி முதல் மாலை 3.30 மணி வரை)
டேவணித் தொகை செலுத்துவதற்கான கடைசி நாள்: 23.12.2026
விற்பனையின் விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு https://www.bankofbaroda.in/e-auction மற்றும் Baanknet.com என்ற இணையதள இணைப்பை பார்க்கவும்/வருகைதரவும். மேலும் ஏதாவார்க்கள் தொடர்பு கொள்ள வேண்டிய அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி செல்: 9487451022 & 95150 24578 தொடர்பு கொள்ளலாம்.
தேதி : 23.11.2026
இடம் : குந்தாரப்பள்ளி
அதிகாரப்பூர்வ அலுவலர், முதன்மை மேலாளர்/ பேங்க் ஆஃப் பரோடா

கோயிலில் மின்சாரம் தாக்கி கல்லூரி மாணவர் பரிதாபம்

■ பாலக்கோடு, நவ. 24-

பாலக்கோடு அருகே பி.கொல்லஅள்ளி கிராமத்தைச் சேர்ந்தவர் சரவணன். இவர் சோமனஅள்ளியில் உள்ள கோயிலில் பூசாரியாக பணியாற்றி வருகிறார்.

இவரது மகன் பரமசிவம் (16). பாலக்கோடு சர்க்கரை ஆலை பாலிடெக்னிக் கல்லூரியில் முதலாம் ஆண்டு படித்து வந்தார். இந்நிலையில் நேற்று முன்தினம் இரவு பிரதோஷத்தையொட்டி சோமனஅள்ளியில் உள்ள சோமேஸ்வரர் கோயிலில் நடந்த பூஜைக்காக தனது தந்தையுடன் பரமசிவம் சென்றுள்ளார். பூஜை நிறைவடைந்த பின்னர் கோயில் வளாகத்தில் இருந்த மின் விளக்கின் வயரை எடுத்தபோது, எதிர்பாராத விதமாக மின் கசிவு காரணமாக அவர் மீது மின்சாரம் பாய்ந்துள்ளது.



பரமசிவம்

இதில் தூக்கி வீசப்பட்ட பரமசிவம் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக இறந்தார். தகவலறிந்த பாலக்கோடு போலீசார் சம்பவ இடத்துக்கு சென்று மாணவரின் உடலை மீட்டு, பிரேதப் பரிசோதனைக்காக பாலக்கோடு அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும் இது தொடர்பாக பாலகோட்டை போலீசார் வழக்குப் பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.



தர்மபுரி கலெக்டர் அலுவலகம் அருகே கோரிக்கைகளை வலியுறுத்தி ரேஷன் கடை பணியாளர் சங்கம் சார்பில் ஆர்ப்பாட்டம் நடந்தது.

தர்மபுரியில் ரேஷன் கடை ஊழியர்கள் ஆர்ப்பாட்டம்

■ தர்மபுரி, நவ. 24-

தர்மபுரி கலெக்டர் அலுவலகம் அருகே தமிழ்நாடு அரசு நியாய விலை கடை பணியாளர் சங்கம் சார்பில் கோரிக்கைகளை வலியுறுத்தி கண்டன ஆர்ப்பாட்டம் நடந்தது. மாநில செயலாளர் கோவிந்தராஜ் தலைமை வகித்தார். மாவட்ட செயலாளர் குமார் வரவேற்றார். கருணாகரன், சீனிவாசன், காளி, கார்த்தி, அன்பழகன், பழனிசாமி, ராமன், தன சேகரன், முருகன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஆர்ப்பாட்டத்தில் ரேஷன் கடைகளில் காலியாக உள்ள பணியிடங்களுக்கு கூட்டுறவு சங்கங்களில் உள்ளவர்களை நியமனம் செய்ய பதிவாளரின் கற்றறிக்கையை ரத்து செய்ய வலியுறுத்தி கோஷம் எழுப்பினர். மாவட்ட பொருளாளர் ஜான் ஜோசப் நன்றி கூறினார்.